கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறை குறைவதால்

# வளரிளம் பருவத்தினருக்கான சவால்கள் அதிகரித்துள்ளன

● பாரதிதாசன் பல்கலை. துணைவேந்தர் கருத்து

திருச்சி

சமுதாயத்தில் கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறை குறைந்து வருவதால் வளரிளம் பருவத்தினருக்கான சவால்கள் அதிகரித்துள்ளன என்று பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணை வேந்தர் வெ.மா.முத்துக்குமார் தெரிவித்தார்.

பாரதிதாசன் பல்கலைக்கழக மகளிரியல் துறை சார்பில், குடும்பம் மற்றும் வளரிளம் பருவ ஆலோசனை மையம் பல்கலைக்கழக காஜாமலை வளாகத்தில் நேற்று முன்தினம் திறக்கப்பட்டது.

மையத்தை திறந்து வைத்து வெ.மா.முத்துக்குமார் பேசியது: சமுதாயத்தில் கடந்த சில ஆண்டுகளாக கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறை குறைந்து வருவதால் வளரிளம் பருவத்தினருக்கான சவால்கள் அதிகரித்துள்ளன.

இந்தப் பருவத்தில் உள்ள மாணவ, மாணவிகள் மனதை அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும் வைத்துக்கொண்டு படிப்பில் கவனத்தைச் செலுத்த வேண்டும். நல்ல விஷயங்களை நோக்கிய பார்வை இருக்க வேண்டும். இதற்கு இந்த ஆலோசனை மையம் உதவியாக இருக்கும் என்றார்.

விழாவில், மகப்பேறு மருத்துவ நிபுணர் தி.ரமணிதேவி பேசியது: பெண்கள் வளரிளம் பருவத்தில் போதிய சத்தான உணவுகளை எடுத்துக் கொள்ளாததால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. திருமணத்துக்கு முன் மருத்துவர்களிடம் பெண்கள் ஆலோசனை பெறுவது அவசியம்.

நகர்ப்புறங்களில் உடல் பருமன் பிரச்சினையும், கிராமப்புறங்களில் ஊட்டச்சத்துக் குறைபாடும் காணப்படுகிறது. இதனால் பெண்களுக்கு உடல் ரீதியாக பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதுவே மன ரீதியான பிரச்சினைகளுக்கும் காரணமாக அமைகின்றன. இளம் வயதினர் உடற்பயிற்சி மற்றும் யோகா மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்றார்.

விழாவில், மகளிரியல் துறைத் தலைவர் ந.மணிமேகலை, ஆட்சிக் குழு உறுப்பினர்கள் கோபிநாத் கணபதி, மங்களேஸ்வரன் மற்றும் பேராசிரியர்கள், மாணவிகள் பங்கேற்றனர்.

## சுய தொழில் வாய்ப்பு ஆலோசனை

பாரதிதாசன் பல்கலைக்கழக மகளிரியல் துறையின் குடும்பம் மற்றும் வளரிளம் பருவ ஆலோசனை மையத்தில் பெண்களுக்கு மட்டுமல்லாமல், மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஆண்களுக்கும் ஆலோசனை வழங்கப்படும். மேலும், சுய தொழில் வாய்ப்புகள், அதுதொடர்பான பயிற்சிகளுக்கான வழிகாட்டுதல்கள் அளிக்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் நேரில் வந்து ஆலோசனை பெறலாம். மேலும், விவரங்களுக்கு 0431 2333223 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.